**செய்தி வெளியீடு** **நாள் : 23.09.2025**

**"கோயம்பேடு மார்க்கெட்டில் செப்டம்பர் மாதம் 25ஆம் தேதி தொடங்கி அக்டோபர் 5 ஆம் தேதி வரை ஆயுதபூஜை சிறப்புச் சந்தை நடைபெறும்."**

**"சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் மூன்றாவது பெருந்திட்ட வரைவுத் திட்டம் இந்தாண்டு இறுதி அல்லது 2026 தை மாதம் முதல் நாள் வெளியிடப்படும்."**

## மாண்புமிகு அமைச்சர் திரு. பி.கே. சேகர்பாபு அவர்கள் தகவல்

******

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின்** நல்வழிகாட்டுதலின்படி இன்று *(23.09.2025)* சென்னை, கோயம்பேடு அங்காடி நிர்வாக அலுவலகத்தில், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான **திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள்** அங்காடி நிர்வாகக் குழுவிற்கென *(Koyambedu Market Management Committee)* புதிதாக உருவாக்கப்பட்டுள்ள இணையதளச் சேவையை தொடங்கி வைத்தார்.

கோயம்பேடு அங்காடி நிர்வாக அலுவலத்தில், அங்காடி நிர்வாகத்திற்கென புதிதாக உருவாக்கப்பட்டுள்ள "**இணையதள சேவையை**" தொடங்கி வைத்து, செய்தியாளர்களிடம் மாண்புமிகு அமைச்சர் **திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள்** பேசும்போது தெரிவித்ததாவது:

பணிகளை விரைவுப்படுத்தும் நோக்கத்தோடு பல்வேறு துறைகள் கணினிமயமாக்கப்பட்டு வருகிறது. அந்த வகையில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் சார்பில் செயல்படும் கோயம்பேடு அங்காடி நிர்வாகத்திற்கென புதிதாக இணையதள சேவை இன்றைக்கு துவக்கியுள்ளோம். இந்த இணையதளத்தின் வழியாக, 3000க்கும் மேற்பட்ட கடைகள் இந்த அமைப்பில் பராமரிப்பு கட்டணம், விலைகள் நிர்ணயம் போன்றவற்றை அறிந்து கொள்ள முடியும்.

கோயம்பேடு மார்க்கெட்டில் செப்டம்பர் மாதம் 25ஆம் தேதி தொடங்கி அக்டோபர் 5 ஆம் தேதி வரை ஆயுதபூஜை சிறப்புச் சந்தை நடைபெறும். கோயம்பேடு சந்தை பகுதியில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் சார்பிலும், மெட்ரோ ரெயில் பணிகளையும் ஆயுத பூஜை திருவிழா காலத்தில் 5 நாட்கள் நிறுத்த வியாபாரிகள் கோரிக்கை வைத்துள்ளனர், சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கப்படும்.

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் மூன்றாவது பெருந்திட்ட வரைவுத் திட்டம் இந்தாண்டு இறுதி அல்லது 2026 தை மாதம் முதல் நாள் வெளியிடப்படும். **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்** இந்த பணிகளை விரைவுப்படுத்த உத்தரவிட்டிருக்கிறார், அந்த வகையில் இந்த பணிகள் விரைவுப்படுத்தப்பட்டு மூன்றாவது பெருந்திட்ட வரைவுத் திட்டம் 2026 தை மாதம் வெளியிடப்படும்.

கோயம்பேடு சந்தையை மேம்படுத்த மழைநீர் கால்வாய், மெட்ரோ ரயில் உள்ளிட்ட பல்வேறு வளர்ச்சிப் பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கோயம்பேடுக்கு வருவோரின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளதால் கழிவறைகளும் இலவசமாக ஏற்படுத்தப்பட்டுள்ளது. கோயம்பேடு சுத்தமான அங்காடியாக மாற்றுவதற்கான அனைத்து முயற்சிகளையும் எடுத்து வருகிறோம். கடந்த காலத்தில் கோயம்பேடு மார்க்கெட்டுக்கு அதிக நிதி செலவிடப்படவில்லை.

**இவ்வாறு மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் தெரிவித்தார்.**

இந்நிகழ்ச்சியில் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி.காகர்லா உஷா, இ.ஆ.ப., சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர்/முதன்மைச் செயலாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., மாநகராட்சி மத்திய வட்டார துணை ஆணையர் திரு.எச்.ஆர்.கௌஷிக், இ.ஆ.ப., விருகம்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் திரு.ஏ.எம்.வி.பிரபாகர் ராஜா, கோயம்பேடு அங்காடி முதன்மை நிர்வாக அலுவலர் திருமதி.மு.இந்துமதி, கண்காணிப்புப் பொறியாளர் திரு.ராஜன்பாபு, மாமன்ற உறுப்பினர் திரு.லோகு, வணிகர் சங்க பிரதிநிதிகள் மற்றும் சிஎம்டிஏ அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.